**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 08.02.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக

## பூச்சியியல் துறை மாணவிகளுக்கு UGC- SJSGC உதவித் தொகை

பெண்களுக்கான உயர்கல்வி ஊக்கத் தொகை உட்பட பெண்களின் நிலையை மேம்படுத்த இந்திய மத்திய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. பெண்களின் உயர்கல்வியை ஊக்குவிக்க, பல்கலைக்கழக மானியக்குழு, ஒற்றைப்பெண் குழந்தைகளுக்கான சாவித்ரிபாய் ஜோதிராவ் ஃபுலே உதவித் தொகையை (SJSGC) நிறுவியுள்ளது.

SJSGC என்பது முனைவர் பட்டபடிப்பு வரையிலான படிப்பைத் தொடர்வதற்கான உதவித் தொகை திட்டமாகும். இந்தத் திட்டத்தின் இலக்கு "ஒற்றை பெண் குழந்தை" ஆகும். ஒவ்வொரு ஆண்டும் தகுதியான விண்ணப்பங்களின் அடிப்படையில் உதவித் தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

2022 ஆம் ஆண்டிற்கான உதவித் தொகை வாய்ப்புகள் செப்டம்பர் 2022 இல் அறிவிக்கப்பட்டது. கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் பூச்சியியல் துறையில் முனைவர் பட்டபடிப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணவிகள் வி.பி.அபர்ணா, சு.வெ.தாரிணி, கி.இலக்கியா மற்றும் செ.பரிபூரணி ஆகியோர் SJSGC உதவித் தொகை பரிசீலனைக்காக UGC க்கு தங்கள் ஆராய்ச்சி முன் மொழிவை வழங்கியிருந்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் முடிவுகள் 06.02.2023 அன்று UGC இணையதளத்தில் வெளியிடப்பட்டன. விண்ணப்பித்திருந்த நான்கு மாணவிகளும் உதவித் தொகை பெறுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். உயர்கல்வி ஊக்கத் தொகை பெறவுள்ள மாணவிகளுக்கு பல்கலைக்கழக துணைவேந்தர், பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர், முதன்மையர் (முதுகலைபடிப்பு) மற்றும் வேளாண் பூச்சியியல் துறைத்தலைவர் மற்றும் பிறகல்வியாளர்கள் பாராட்டி ஆராய்ச்சியில் சாதனை புரிய வேண்டும் என வாழ்த்து தெரிவித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**